## மீன்பிடித் தொழில் அதிகாரியை தேடுகிறார் செயலக அதிகாரி!

மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைய யாழ் மாவட்டப் பொறுப்பதிகாரி ஒருவர் செயலகத்தில் நடைபெறும் திணைக்களத்தலைவர்களின் கூட்டங்களுக்கு அண்மைக்காலமாக வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பல லட்சம் ரூபா இத்தத்துறைக்கு பல் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கியும் அதனைப்பயன் — 04 ஆம் பக்கம் பார்க்க

## மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சைக்கிள் திருட்டு தொடர்கிறது

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் மாணவிகளின் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டுப் போவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. கடந்தவாரம் மேற்படி கல்லூரியில் கற்கும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவி ஒருவரின் 4.700 ரூபா பெறுமதியுடைய புதிய லுமாலா லேடீஸ் சைக்கிள் ஒன்றும் 8 ஆம் வகுப்பில் கற்கும் மாணவி — 04 ஆம் பக்கம் பார்க்க

## உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்ய முடியாதநிலை

ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, மணியம்தோட்டம், (ஒரு பகுதி) கொய்யாத் தோட்டம் பாஷையூர், பாண்டியன்தாழ்வு, வலன்புரம், உதயபுரம் பகுதி மக்கள் பலர் தமது உலர் உணவு அட்டைகளை மீளாய்வு செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர். இப்பகுதிக்கு புதிதாக நியமனமான கிராமச்சேவகரைத் தேடி இதற்காக மக்கள் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு

விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 03 ஒலி 135 பிரமோதூத பங்குனி 28 (11-04-1991) வியாழன்

## சமூகசேவை உதவிப்பணம் கிடைக்கவில்லை

பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில், சமூக சேவை அமைச்சினால் வழங்கப்படும் உதவிப் பணம் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் வழங்கப்படவில்லை.

இதனால் இப்பணத்தை நம்பியிருப்போர் பெரிதும் கஷ்ட முறுகின்றனர். (50-36)

## அந்த மூன்று பெண்களும் விசாரணையில்

பருத்தித்துறைப் பகுதியில் சிறுவன் ஒருவன் பாலியல் வன் செயலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று யுவதிகள் வடமராட்சிப்பகுதி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட சிறுவன் யாழ் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றான். புலோலிப் பகுதியில் உள்ள பாடசாலை யொன்றில் மாலை நேர மேலதிக வகுப்புக்களில் பயிலும் மூன்று யுவதிகளே இது தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

# இராணுவ நடவடிக்கையால் பிரச்சினை தீரப்போவதில்லை

## சிறில் ரணதுங்க ஒத்துக்கொள்கிறார்

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில சூசகமாகக் குறிப்பிட்டார்.

"வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படைகள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையினால் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படப் போவதில்லை" இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற யுத்தத்தின் போது படையினரும், விடுதலைப்புலிகளும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சண்டையில் கொல்லப்பட்ட தமது சகாக்களின் உடல்களைப் பரிமாறிக் —04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார், காரைநகர் சம்பவத்தில் 111 படையினர் பலி - ரணதுங்க

கடந்த சில தினங்களில் மன்னார், காரைநகர் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் படையினரில் 111பேர் கொல்லப்பட்டதாகவும் 187 —04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் வை-12 குண்டுவீச்சு பாடசாலைகள், ஆலயம் சேதம்

காரைநகரில்நேற்றுக்காலை ... தது. ... வை-12இன் ...

## கையொப்பமிட பணிப்பு

காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இனிமேல் வாரத்தில் 2 தினங்கள் தங்களது கையொப்பத்தினை இட்டு வரவினைப் பதிந்து கொள்ள வேண்டும் என தெரியவந்துள்ளது.

இதன் கொழும்புத் தலைமைச் செயலகத்தின் நிர்ப்பந்தத்தினாலேயே ஊழியர்கள் கையொப்பமிட வேண்டிய —04 ஆம் பக்கம் பார்க்க

## இன்று அஞ்சலி

நேற்று காரைநகரில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த பகுநாதன் (புத்தூர்) புகழுடல் இன்று புத்தூர் மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. (71)

## மேலதிகமாக லக்ஸ்பிறே

## ஏலத்தில்விற்பனை

ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக்குழுமையத்தில் நல்லினப் பசுக்கன்றுகள் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் ஏலத்தில்விற்பனை செய்யப்பட்டன.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பசுக்கன்றுகள் ஒவ்வொன்றும் ஆயிரம்ரூபாவுக்கு மேல் விற்பனை ஆயின.

இதேவேளை நேற்றுபோன்றாலை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் ஆடுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ப - 11

## ஜனாதிபதியிடமிருந்து சமாதானத் தூது?

இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வொன்றைக் காண்பதில் ஜனாதிபதி பிரேமதாஸ சில நாள்களாக அதிக அக்கறை காட்டி வருகிறாராம்.

அவருடைய ஆசியுடன் தமிழகப் பிரமுகர் ஒருவர் வடக்கே வந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த சில தினங்களில் அரசியல் அரங்கில் சில முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (70)

## காங்கேசன் சீமெந்து ஊழியருக்கு விழா முற்பணம் கிடைக்கும்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கான விழா முற்பணமும் உடைகளுக்கான பணமும் வழங்கப்படவிருக்கின்றது.

இப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடைய மேற்படி நிறுவனத்தின் ஊழியர்கள் தங்கள் விவரங்களை யாழ்ப்பாணம் - நாவலர் வீதியிலுள்ள தொழிற்சங்க...

# பாடசாலைகள், ஆலயம் சேதம்

காரைநகரில் நேற்றுக்காலை வை-12 ராட்சத விமானம் நடாத்திய குண்டுவீச்சில் பழையகண்டியிலுள்ள வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை முற்றாகச்சேதமடைந்தது.

ஹெலிக்கப்டர் ஒன்று நடாத்திய தாக்குதலில் தியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராஜா மண்டபம் சேதமடைந்தது மருதடிப்பிள்ளையார் கோவிலும் சேதமடைந்தது. வை-12இன் மூன்று குண்டுகள் வெடிக்கவில்லை.

காரைநகர் முகாமில் இருந்தும் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் முகாமை அண்டிய பகுதியை நோக்கி நடாத்தப்பட்டது. ப-31

# வேலணையில் இரவு குண்டு வீச்சு மாணவி பலி; 9 பேர் படுகாயம்

நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் வேலணை சரவணைப்பகுதியில் வை-8 விமானம் குண்டு வீசியதில் ஒரு பாடசாலை மாணவி கொல்லப்பட்டதுடன் 3 குடும்பங்களை சேர்ந்த 9 பேர் படுகாயமடைந்தனர்.

பாமதி சொக்கலிங்கம் (19) என்ற உயர்தர வகுப்பு மாணவியே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவர்.

கந்தையா பார்வதிப்பிள்ளை (49), திருமதி சொர்ணம்மா (45), மு. தருமேஸ்வரன் (15) மு. கலாமணி (20), மு. வனிதாமதி (17), சுப்பையா கந்தசாமி (58), கந்தசாமி புஸ்பலீலா (48), க. ரஞ்சித கௌரி (20), பி. முத்துலிங்கம் (58) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

சரவணை 8 ஆம் கட்டைப் பகுதியிலும் ஒரு குண்டு விழுந்து வெடித்ததால் இப்பகுதியில் உள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. 74

## காரைநகரில் இருந்து மேலும் 5000 குடும்பங்கள் இடம் பெயர்வு

காரைநகரிலிருந்து அகதிகளாக இடம் பெயர்ந்த சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், மூளாய் அமெரிக்கன் மிஷன் த. க. பாடசாலை, மூளாய் பிள்ளையார் கோவில் ஆகிய பொது இடங்களிலும், தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். மூளாய் இராம சேவை அலுவலர் இ. க. பாலசிங்கம் மேற்கொண்ட முயற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழ் அகதிகளைக் கண்காணிக்க உத்தரவு

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்குமாறு தமிழக அரசு அதிகாரிகளைக் கேட்

—04 ஆம் பக்கம் பார்க்க

தூர் மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. (71)

விழா முற்பணமும் உடைகளுக்கான பணமும் வழங்கப்

மேற்படி நிறுவனத்தின் ஊழியர்கள் தங்கள் விபரங்களை யாழ்ப்பாணம் - நாவலர் வீதியிலுள்ள தொழிற்சங்கப் பணிமனையில் இம்மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது. (47)

## மேலதிகமாக லக்ஸ்பிறே சகலருக்கும் கிடைக்குமா?

இலவச உணவு விநியோகத்தில் இம்முறை மேலதிகமாக 'லக்ஸ்பிறே' பைக்கெட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றமையினால் வெளிச் சந்தையில் 'லக்ஸ்பிறே'யின் விலை வீழ்ச்சியடைந்து வருவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கைப் படி 'லக்ஸ்பிறே' வழங்கப்படுவதால் சில குடும்பங்களின் ஐந்துக்கும் மேற்பட்ட பக்கட்டுகள் கிடைக்கின்றன.

மேலதிகமாகக் கிடைக்கும் 'லக்ஸ்பிறே பக்கட்டுக்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்குப்பகுதி மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் கிழக்குமாகாண மாணவர்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் சில ஐம்பதாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

இப்பணத்தின் மூலம் இவர்களுக்கு ஒரு தொகுதி மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதிப்பணத்திலிருந்து காகிதாதிகள் வாங்கி வழங்கப்படவுள்ளதாக பல்கலைக் கழக அதிகாரி ஒருவர் கூறினார். (74)

## இலங்கை-இந்தியா கூட்டுக்குழு வருட இறுதியில் அமையும்

இலங்கை-இந்திய வர்த்தகக் கூட்டுக்குழுவொன்றை இவ்வருட இறுதியில் அமைப்பது என நேற்று டில்லியில் நடைபெற்ற இரு நாடுகளினதும் அதிகாரிகள் மாநாட்டில் முடிவானது.

இந்திய வெளியுறவு அமைச்சின் செயலர் முசுகுந் டுபேயும் இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலர் பெர்னாட் திலகரட்னவும் இது தொடர்பாக கூட்ட முடிவில் இணக்கம் கண்டனர்.

## சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப் படவுள்ள சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடத்துக்கான கட்டிட அமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினால் வரும் பணம் வைத்தியசாலை அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும். (59)

## 338 பேருக்கு அதிவிசேட சித்தி; கொழும்புமாணவர் மண்கவ்வினர்

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் கொழும்பு நகர மாணவர்களை விடக் கிராமப்புற மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய பாடத் திட்டப் பரீட்சைக்கு மூன்றரை லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் 33,600 பேர் உயர்தர வகுப்பில் அனுமதி பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளனர்.

இப்பரீட்சையில் மொத்தம் 338 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் 173 மாணவர்கள் மட்டுமே கொழும்பு பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள்.

# இனப்பிரச்சினைத் தீர்வில் உதவுவதற்கு மலேசிய அரசாங்கமும் தற்போது ஆர்வம்

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் மலேசிய அரசு ஈடுபாடு காட்டுவதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க மலேசியா உதவ வேண்டும், அக்கறை காட்டவேண்டுமென பலரும் மலேசிய அரசைக் கோரியுள்ளதாகவும் அதனையடுத்தே இது விடயத்தில் அக்கறைகாட்ட கோலாலம்பூர் விரும்புவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போது மலேசியாவில் இலங்கைத் தூதுவராக உள்ள முன்னாள் தமிழ் அமைச்சர் ஒருவர் இதுவிடயமாக மலேசிய தமிழ் அமைச்சர் சாமுவேலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் ஏனைய மலேசிய தமிழ் அமைச்சர்களும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் கோலாலம்பூர் அதிக அக்கறையெடுத்து செயற்படுவதையே விரும்புவதாகவும் 'இந்து' தெரிவித்துள்ளது.

## கொழும்பு நகர்ப்புற சேவை 10 புதிய 'பவர்செற்' ரயில்கள்

கொழும்பு நகர்ப்புற சேவைக்கென பத்து புதிய "பவர்செற்" புகையிரதங்களை புகையிரதப் பகுதி இறக்குமதி செய்துள்ளது.

இருபது கோடிருபா பெறுமதியுடைய இந்த புகையிரதங்கள் கொழும்பு- நீர்கொழும்பு அளுத்கம-பொல்காவலை மார்க்கங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன

750 முதல் 1000 பேர்வரை பயணம் செய்யக் கூடிய இப்புகையிரதங்களில் கண்ணாடி இழை ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ரயில்கள் ஒவ்வொன்றுடனும் தேவையேற்படின் மேலதிகமாக மூன்றுபெட்டிகளை இணைக்க முடியும்.

இதே போன்ற மேலும் 10 'பவர்செற்' புகையிரதங்கள் இவ்வருட இறுதிக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும், ஏற்கனவே தருவிக்கப்பட்ட 10 செற்களும் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## தொழுகைவேளை பள்ளிவாசலுக்குள்ளேயே படுத்துறங்கிய முஸ்லிம்கள்

பள்ளிவாசலில் தொழுகை நடந்துகொண்டிருந்த வேளை அதனைப் புறக்கணித்த சில முஸ்லிம்கள் அந்த வேளை பள்ளிவாசல் உள் முற்றத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனராம்.

அனுராதபுரம் புதிய நகரில் உள்ள பள்ளிவாசலிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அச்சமயம் அங்கு சென்ற முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆளுங்கட்சி முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இதனால் ஆத்திரமுற்று தொழுகைவேளை அதனைப் புறக்கணித்து பள்ளிவாசலிலேயே படுத்துறங்கிய முஸ்லிம்களை எச்சரித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## டெலக்ஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

மட்டக்களப்புக்கும்-கொழும்புக்குமிடையேயான 'டெலக்ஸ்' தந்தி தொடர்புச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லக்கில அஞ்சல் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இச்சேவை கடந்த இல மாதங்களாகத் தடைப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டுநகருக்கும் வெளியிடங்களுக்குமிடையேயான தொலைபேசிச் சேவை விரைவில் சீரடையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆனந்தநடராஜா கொழும்பு வருகிறார்

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் டாக்டர் ஆனந்த நடராஜா தீட்சகர் இம்மாதம் 17 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

இவர் சிதம்பரம் சபாநாயகர் ஆலய தர்மகர்த்தாவாகவும் இருந்து வருகிறார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை பொதுப்பட்டமளிப்பு - 1990

டிப்ளோமாக்கள்/பட்டங்கள்/பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி/கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1991 ஆடி மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும் பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1991ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30ஆந் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முதுதத்துவமாணித் தேர்வு
3. முதுகலைமாணித் தேர்வு
4. முதுவிஞ்ஞானமாணித் தேர்வு
5. கல்விப்பட்டப்படிப்பின் டிப்ளோமாத் தேர்வு 1989
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி தேர்வு 1989/90
7. பொதுக்கலைமாணித்தேர்வு 1989
8. பொது விஞ்ஞானமாணித்தேர்வு 1989
9. சங்கீதம் / பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1989
10. சிறப்பு விஞ்ஞானமாணித்தேர்வு 1989
11. வணிகமாணித் தேர்வு 1989

# புதுக்கோட்டை மீனவரின் படகு ஸ்ரீலங்கா கடற்படையால் எரிப்பு

புதுக்கோட்டைகடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடிப் படகொன்றை ஸ்ரீலங்கா கடற்படையினர் பறிமுதல் செய்து தீக்கிரையாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது நேற்று முன்தினம் இச்சம்பவம் நடந்துள்ளது

இப்படகில் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 3 மீனவர்களை புதுக்கோட்டை கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அவர்கள் மூவரையும் பலவந்தப்படுத்தி வேறுபடகு ஒன்றில் ஏற்றிவிட்டு குறித்த படகை தீக்கிரையாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கச்சதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக வாசிகள் மூவரை ஸ்ரீலங்கா கடற்படையினர் சுட்டு படுகாயப் படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சிப் பகுதி தபாற்பொதிகள் வவுனியாவில் பல மாதங்களாகத் தேக்கம்

பரந்தன், கிளிநொச்சி பகுதிகளுக்குரிய தபாற்பொதிகள் வவுனியாவில் ஒரு மாதத்துக்கு மேலாக தேங்கிக் கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வவுனியாவை வந்தடைந்த இந்த தபாற் பொதிகள் அங்கு தேங்கியுள்ளன. அவற்றை எடுத்துவர இங்கிருந்து ஊழியர்கள் எவரும் வவுனியாவுக்கு செல்லவில்லை

இதேவேளை கிளிநொச்சி தபால்களை யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத் தபால்கள் கிளிநொச்சிக்கும் கிளிநொச்சி தபாலகத்தில் கடமைபுரியும் ஓர் உயர் அதிகாரியே தொடர்ந்து பல மாதங்களாக எடுத்துச் செல்கிறார்.

இத் தபாலகத்தில் ஊழியர்கள் பணி கடமை புரிந்தும் இவ்விடயத்தில் அவர்கள் அக்கறையின்றி இருப்பதாகத்

## பாவனைக்குதவாத மாண் விற்பனை

நீர்வேலிப் பகுதிகளில் விற

## அரசின் இலவச உலர் உணவு பெற வடக்குகிழக்கில் 6,70,000 பேர் தகுதி

வீடு வாசல்களை இழந்து அகதிகளாக வடகிழக்கு மாகாணத்தில் 6,70,000 பேர் உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் உலர் உணவு பெற உரித்துள்ளவர் களென்று ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சிக்கன கடனுதவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உதவி கிட்டும்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1500 ரூபா கடனடிப்படையில் விதை, உரம், மண்ணெண்ணெய் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஐம்பது அங்கத்தவர் கொண்ட சங்கமொன்றிற்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரமும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படவுள்ளன.

(ப-2)

## 'இருளைப் பழிப்பதை விட்டு ஒளியேற்றுவதில் ஆர்வம் கொள்வோம்'

நேற்று முன்தினம், அரி

தில் எமக்கு எள்ளளவும் சந்

கள் அங்கு தேங்கியுள்ளன. அவற்றை எடுத்துவர இங்கிருந்து ஊழியர்கள் எவரும் வவுனியாவுக்கு செல்லவில்லை என வவுனியா தபாற் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தபாலகத்தில் ஊழியர்கள் பணி கடமை புரிந்தும் இவ்விடயத்தில் அவர்கள் அக்கறையின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (35)

## கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒப்பந்தவேலை செய்யக்கட்டுப்பாடு

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் என்பன ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் மேற்குறித்த சங்கங்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதாக இருந்தால் குறித்தப்பிரிவு உதவி அரசாங்க அதிபரின் அனுமதி பெறப்படல் வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த வேலை தொடர்பான பத்திரங்கள் கையொப்பமிடுவதற்கு முன்பாக இது குறித்து கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது. (33)

## பாவனைக்குதவாத பாண் விற்பனை

நீர்வேலிப் பகுதிகளில் விற்பனை செய்யப்படும் பாண் விற்பனைக்குகந்ததாக இல்லை எனப் பொதுமக்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக நீர்வேலி தெற்குப் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்ட பாண்களில் வண்டுகளும், புழுக்களும் காணப்பட்டன.

வீட்டிற்கு எடுத்துச் சென்ற பின் அவற்றைப் பிரித்தபோது உண்ணமுடியாத அவலத்தைப் பலரும் சொல்லிக் கவலையைத் தெரிவித்தனர்.

அதேவேளை இது சம்பந்தமாக மக்கள் நலனில் அக்கறை கொண்டோர் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கூடுமெனவும் அப்பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## ... ஒளியேற்றுவதில் ஆர்வம் கொள்வோம்'

நேற்று முன்தினம், அரியாலை அமல அன்னை அன்பகத்தில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றில் அன்பக நிர்வாகிகள், கலாநிதி .க. கணேசராசா (ஜே பி) அவர்களின் சேவை நலத்தை பாராட்டி ''பல்துறை தொண்டன்'' என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

உங்கள் சிந்தனை எங்கள் உயர்வுக்கு வழி சமைக்கிறது. உங்கள் உதவிகள் எம் நிலைய அனாதைச் சிறுவர்களின் வாழ்விற்கு வளம் சேர்க்கிறது இன்றைய நெருக்கடியில் இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவோம், அதற்காக உங்கள் பங்களிப்புகளை பல வழிகளில் எமது இல்லத்தின் முன்னேற்றத்திற்காகவே செய்வீர்கள் என்பதில் எமக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை என்று அமல அன்னை அன்பகத் தலைவி தமது உரையில் குறிப்பிட்டார். (16)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எண்ணெய்தேய்த்து மில்க் வைற் ஒலிவ் தூள் பாவித்துத் தலை முழுகிவர உடல் வெப்பம் சமனடைந்து சுகவாழ்வு கிட்டுகிறது. மில்க்வைற் 04062

### தவறிவிட்டது

செய்திகள் சேகரிக்கும் கொப்பி ஒன்று புங்குடுதீவில் பொம்பர் தாக்குதலின்போது சந்தையடிப் பகுதிக்கும் தபாற்கந்தோருக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தோர் புங்குடுதீவு தபாற் கந்தோரில் ஒப்படைக்கவும். ச. அமிர்தராசா, புங்குடுதீவு-10 04065

தேர்வு 1989

10. சிறப்பு விஞ்ஞான மாணித்தேர்வு 1989
11. வணிகமாணித் தேர்வு 1989
12. தொழில் நிர்வாக மாணித்தேர்வு 1989
13. சிறப்புகலைமாணித் தேர்வு 1928
14. சித்த வைத்திய மாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும், மற்றும் விவரங்களையும், முத்திரை ஒட்டிய 23X10 செ மீற் அளவுடைய, சுய முகவரியிட்ட கடித உறையை உப பதிவாளர் / தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலைநேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04066 — பதிவாளர்


உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது!

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்**

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது.

சுகாதாரமான சுவையான உணவு வகைகளுக்கும் மற்றும் சிற்றுண்டி ஓடர்களுக்கும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

திருப்தியான உணவுப் பார்சல்கள் ரூபா 25/- மட்டுமே.

19/3 கொழும்புத்துறைசாலை, சுண்டிக்குளி.

04019


## யாருடையது?

புங்குடுதீவு சந்தையடிப் பகுதியிலுள்ள தேநீர்க் கடை ஒன்றில் நல்லின கறவை பால்மாடு ஒன்று அநாதரவாக வந்துள்ளது. சம்பந்தப்பட்டோர் தகுந்த ஆதாரங்காட்டிப் பெறலாம்.

சந்தையடி.
புங்குடுதீவு - 2.

தகவல்: எம். நவரத்தினம்
04064

# பரீட்சைவேளையில் யுத்த நிறுத்தம்?

## 23 ஆம் திகதியே தீர்மானிக்கப்படும் என்கிறார் அதிகாரி

வடக்குக் கிழக்குப் பகுதியில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர விசேட பரீட்சை நடைபெறவுள்ள இம் மாதம் 23 ஆம் திகதிக்கும், மே மாதம் 18 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், பரீட்சை நடைபெறவுள்ள பகுதிகளில் யுத்தநிறுத்தம் செய்வது குறித்து அரசபடைகள் இதுவரை முடிவு எதுவும் எடுக்கவில்லை எனக் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

பரீட்சை மண்டபங்கள் உள்ள பகுதிகளில் யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிப்பதா இல்லையா? என்பது குறித்துப் பரீட்சை ஆரம்பமாகும் போதே, நிலைமையைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படுமென முப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## எயிட்ஸ் நோயாளர் தொகை 2000 ஆண்டில் 100 கோடியாகும்

இன்னும் ஒன்பது ஆண்டுகளில் அதாவது 2000-ம் ஆண்டளவில் உலகில் உள்ள எயிட்ஸ் நோயாளிகளின் தொகை 100 கோடியாக அதிகரித்து விடும் என உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

தற்பொழுது உலகெங்கணும் ஒரு கோடி எயிட்ஸ் நோயாளர்கள் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

## மென் பந்து கிரிக்கெட்

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் நடாத்தவுள்ள 7 வீரர்கள் பங்குபற்றும் 12 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் இப்போட்டியில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போட்டியில் வெற்றியீட்டும் கழகத்திற்கு மாவீரர் மேஜர் டயஸ் கந்தசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப் படிவங்களை நிலையச் செயலாளர் திரு. சச்சிதானந்தசெல்வத்திடம் பெற்று பூர்த்தி செய்த படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர். (16)

## மாலைநேர வகுப்புத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அரசு அறிவிப்பு

மார்ச் மாதம் முதல் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வந்த 'மாலை நேர வகுப்பு' திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுள்ளது.

எனினும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களையும் காலையில் நடத்துவது குறித்து கல்வி அமைச்சு தற்பொழுது ஆராய்ந்து வருகின்றதாம்.

உத்தேச புதிய திட்டத்தின் படி காலை 7. 30 மணிமுதல் 9 மணி வரை இம்மூன்று பாட வகுப்புக்களும் நடைபெறும். அதைத்தொடர்ந்து பிற்பகல் இரண்டு மணிவரை நேர சூசிகைப்படி ஏனைய பாடங்கள் கற்பிக்கப்படும்.

## நாடாளுமன்ற கூட்டம் சுபவேளை ஆரம்பம்

இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் 19 ஆம் திகதி காலை 8. 46 மணிக்கு சுப வேளையில் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'போரினால்பாதிக்கப்பட்டோர்தினம்' மே 8-ல் செஞ்சிலுவை அனுஷ்டிக்கும்

போரினால் பாதிக்கப்பட்டோர் தினம் மே மாதம் 8-ம் திகதி இலங்கை முழுவதும் செஞ்சிலுவைச் சங்கத்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு கிளிநொச்சிக் கிளை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல வித போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சிக் கிளை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் என். சிவராஜசிங்கம் மேற்கொண்டு வருகிறார். (35)

## ஜனாதிபதி மந்திரிகள் பொலிஸாருடன் மோதல்!

ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையில் அமைச்சர்கள் உள்ளிட்ட பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள். பொலிஸாருடன் மோதவுள்ளனர்.

கடந்த மாதம் 'கலை இலக்கியக்களம்' அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கவிதைக்கென பட்டறை ஒன்றை நடத்தியது. இளைய தலைமுறையினர் எண்பது பேர் கலந்து கொண்ட இருநாள் நிகழ்ச்சிகளில் மூத்தகவிஞர்களும் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. புதுமையான, பயனுள்ள இந்நிகழ்ச்சி இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

# கவிதைப் பட்டறை மீதொரு கண்ணோட்டம் - I

— வனமரா

ஒரு அசாதாரண உற்சாகத்துடனும் நிறைந்த ஆர்வத்துடனும் அதீத சந்தோஷப் பீறிடலுடனும் அன்று காலைவிடிந்தது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் எண்பதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கூடியுள்ளனர். நேரம்காலை 8 30 மணிதான் ஆகிறது!

விளையாட்டு மைதானத்தில் ஒரு மரம் நிறையவே பூத்திருந்தது. அந்தப்பூக்கள் எல்லாம் மாலைக்குள் இடம் பெயர்ந்து விடலாம். அதற்காக......... பூக்காமல் இருப்பது மரத்தின் இயல்பாகி விடுமா?

செந்தமிழ்ச் செல்வி அவர்கள் மங்கல விளக்கேற்றும் போது அவை மிக அமைதியாய் எழுந்து நிற்கிறது. விளக்கின் ஒளி ஏறட்டும், எமது மனங்களின் ஒளி வீசட்டும்! நாட்டிலும் புதிய ஒளி பிறக்கட்டும்.

திரு. சி. சிவமகாராசாவும், திரு. ச. விநாயகரத்தினமும் மங்கல விளக்கேற்றும் போது. தூரத்தே துப்பாக்கிகளின் ஒலி கேட்கிறது: நாட்டைக் காக்க...... அங்கே ஒரு குழுவினர் தமது துப்பாக்கிகளைத் துடைத்துக் கொள்ள ......இங்கே ஒரு குழுவினர் தமது பேனாக்களைத் துடைத்துக் கொள்கிறார்கள்:

துர்க்கா துரந்தரி அவர்களின் ஆசியுரை மாணவிகள் இருவரின் இனிமையான தமிழ் வாழ்த்தைத் தொடருகிறது.

"தமிழ் சமூகத்திலேதான் இன்று சிறந்த தமிழ் பேசப்படுகிறது. இங்கு தான் நல்ல இசை வளருகிறது......" என்று தமிழ் நாட்டிலே சொல்லிக் கொள்கிறார்கள். எமது போராட்டச் சூழல் இங்கு நல்ல எழுத்தாளர் உருவாகும் நிலை ஒன்றையும் உருவாக்கி இருக்கிறது. பெருந்தொகையான இளைஞர்கள் இங்குதலை கவிஞர்களாக வரவேண்டும் என்றபேராசிவத்தோடு கூடியிருக்கிறார்கள்.

கவிதையாக்கத்திற்கு நிறைந்த சொல்லாட்சி தேவை. ஆகவே நீங்கள் நிறைய வாசிக்க வேண்டும். சிறந்த கவிதைகளை நிறையப் படித்துமனப்பாடம் செய்துகொள்ள வேண்டும்.

கவிதைக்கு எதுகையும் மோனையும் அழகைக் கொடுக்குமாயினும், மிகப் பிரதானமானது கருத்தைப் பொருள். உங்கள் மனதைத் தொடுகின்ற, பிசைகின்ற பிழிகின்ற அழமான விடயங்கள் கவிதைப் பொருளாக வேண்டும்.

கடினமான தமிழைக் கையாள வேண்டும் என்பதல்லை, பழைய பிரபந்தங்களைப் படிப்பதற்கு எமக்கு இன்று அகராதி தேவைப்படுகிறது. ஆனால் நீங்கள் எளிமையான தமிழை உபயோகிக்கலாம்,

கலை இலக்கியக் களம் எப்போதுமே நிதானமாகச் சிந்தித்துப் பயனுள்ள இலக்கிய விடயங்களை முன்னெடுத்துச் செல்கின்ற அமைப்பு. அவர்கள் செய்கின்ற இப்பட்டறை மாணவ உலகுக்கு மிகுந்த பயனுள்ளது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. இப்பட்டறை வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

முதல் நாள் நிகழ்வில் பங்குபற்றுகின்ற கவிஞர்களைப் பண்டிதர் வீ. அப்புத்துரை …

ஆனால் நல்ல கவிதைகள் இவை என்று காட்டி, அதன் மூலம் கவிதைக்குரிய சில அம்சங்களைக் கூறலாம்.

### கவிதை என்பது ஓர் உணர்வு அநுபவம்

சில வருடங்களுக்கு முன்பு வரை ஓர் ஆசிரியரின் கற்பித்தல் திறமையை மதிப்பிடுவதற்கு அவரை ஒரு கவிதை கற்பிக்கும்படி கேட்பது உண்டு. நல்லாசிரியர் ஒருவர் நல்ல கவிதை ஒன்றைக் கற்பிக்கும்போது மாணவர் கவிதையின் உணர்வைப் பெறுவர். அவர்களின் விழிகள் மலரும், முகம் ஆச்சரியத்தில் மூழ்கிப் போகும், உடலில் மாற்றம் ஏற்படும், ஆலயங்களில் புராணம் படிக்கும் போது கேட்பவர் பரவசப்படுவதுண்டு. ஒரே புராணத்தை பல வருடங்களாய்த் திருப்பித் திருப்பிப்படிக்கிற போதிலும் கூட ஒரு குறிப்பிட்ட இடம் வரும் போது, கேட்பவர் பரவசப்படுவர் Galvanic Skin Response (G. S. R.) மூலம் இவ்வாறு உணரும் அநுபவத்தை அளவிடலாம். நல்ல கவிதைகள் இந்தக் கருவியில் கூடிய அளவு திரும்பலை ஏற்படுத்தும்.

### கவிதை மன ஓசையில் இருந்து உண்டாவது

ஓசை எனும்போது மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று பிரிக்கவேண்டியதில்லை. சிலப்பதிகாரத்திலேயே உரைப்பாட்டு உள்ளது. கவிதை என்பது என்றும் புதுமையானது. என்றும் பழமையானதும்தான்.

கவிதைக்கு ஓசை முக்கியம். நல்ல கவிதைகளில் கவிதை முழுவதிலும் ஒரு ஓசை பிறக்கும் ஒரு கவிதையில் சட்டத்தரணி பேசுகிறானா? மிடுக்கான ஓசை ஒன்று அங்கே காணப்படவேண்டும். மற்றொரு கவிதையில் ஒருவன் மருந்து விற்கிறானா? அந்த ஒலி கவிதையில் கேட்கவேண்டும்.

செப்பலோசை, தூங்கலோசை, துள்ளலோசை எல்லாம் தொனிக்கலாம். கூர்மையும் நுண்உணர்வும் கொண்டு கவிதைகளுக்கு இசை வகுத்தது சாமவேதம் ஆகவே தான் 'Poetry Communicates Itself before it is understood' என்று சொன்னார்கள்.

"இங்கள் தங்கு சடைகங்கை முழங்கும்..." சொல்லிப்பாருங்கள். உள்ளே நடனத்துக்குரிய ஓசை கேட்கிறதல்லவா?

### கவிதை சொற்களுக்குள் அடங்காது

கவிதை ஒன்றில் மிகச் சிறந்த சொற்கள், மிகச் சிறந்த ஒழுங்கில் வருவது உண்மைதான். ஆனால் ஒரு நல்ல கவிதையைப் படிக்கும்போது சிந்தனைகளும், கற்பனைகளும் அந்தச் சொற்களுக்கு அப்பால் செல்ல வேண்டும். அது ஒரு மனப் பதிவைக்கொண்டு வரவேண்டும். அதனால்தான் 'Poetry is Suggestive' என்று சொல்லப்படுகிறது. செய்யுள் என்பது கவிதை இல்லை. செய்யுள் ஒன்றின் பொருள் சொற்களுக்குள் அடங்கி விடலாம். சோதிடச் செய்யுள்கள் அப்படியானவை.

'ஊரார் என அடைத்தும் வருவார் [illegible] எனத் திறந்தும்

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் அமைச்சர்கள் உள்ளிட்ட பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாருடன் மோதவுள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள தேசிய புதுவருட விளையாட்டு விழாவில் சிறப்பு அம்சமாக இடம்பெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியிலேயே ஜனாதிபதி தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அணி பொலிஸ் அணியுடன் மோதவுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தப் போட்டி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டிடத் தொகுதிக்கு முன்னால் உள்ள விளையாட்டுத் திடலிலேயே இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதியினதும், மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்புக் கருதியே இவர்களுடன் மோதுவதற்கு பொலிஸ் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதென்பதும், அதிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பொலிஸ் வீரர்களே இடம்பெறவுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பொலிஸ் குழுவுக்கு பொலிஸ்மா அதிபர் தலைமைதாங்குவார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள், மற்றும் எம். பிக்களுடன் மோதப் போகும் பொலிஸார் தமோற்றம் கொள்வாரா, அல்லது தம் ஆற்றலை முழுமையாக வெளிக்காட்டுவார்களா என்பதை மைதானத்தில் வைத்தே அவதானிக்க முடியும் என விளையாட்டுத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன. (16)

## பண்ணைப்பாலதிருத்தவேலை துரிதகதியில் பாதசாரிகள் பயணம் செய்ய ஏற்பாடு

பண்ணைப் பாலத்தின் திருத்தவேலைகள் ஒரு சில இடங்களில் முற்றாக முடிவடைந்துள்ளது.

மூன்று இடங்களில் கடலின் ஓட்டத்தை மதித்து மரக் குற்றிகளும், தூரங்களும் போட்டுத் திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வேலைகள் மிகவும் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன.

நேற்றுமுன்தினம் பிற்பகலில் பண்ணை வீதியூடாகத் தரைவழியாகப் போடப்பட்டுள்ள முடப்படாத பாலத்தின் வழியாகப் பொதுமக்கள் தங்கள் துவிச்சக்கர வண்டிகளைத் தூக்கிக் கொண்டு மண்டைதீவுப் பாலத்தை அடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (ப-17)

## 'அறவழி' மருந்து உதவி

அறவழிப்போராட்டக் குழுவினால் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு 5000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகள் இவ்வாரஇறுதிக்குள் வழங்கப்படவுள்ளன. சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக முரசொலி செய்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க.

பதில் இருவருக்கும் இடமில்லை. இப்பட்டறை வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

முதல் நாள் நிகழ்வில் பங்குபற்றுகின்ற கவிஞர்களைப் பண்டிதர் இ. அப்புத்துரை அவர்கள் அறிமுகம் செய்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

அரங்குக்குச் சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்கள் தலைமை தாங்கிப் பொலிவு நிறைந்ததோர் தலைமையுரையை வழங்கினார்.

### கவிதை என்றால் என்ன?

பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் 'கவிதை என்றால் என்ன?' என்பதைத் தெளிவாக விளக்கினார்.

''நான் எனது இளமைக் காலம் முதல் கவிதையைக் காதலிக்கிறேன்.

நீ உன் காதலியை அளவுக்கு அதிகமாகக் காதலிப்பாயாயின் அவளைப்பற்றி 'அலுக்கும் வரை'' கூறிக் கொண்டிருப்பாய் என்று ஷேக்ஸ்பியர் கூறுவார். நான் கவிதை பற்றி உங்களுக்கு அலுத்துப் போகும்வரை கூறுவேன்''

என்று தொடங்கிய கவிஞர் தனக்குத் தரப்பட்ட நேரத்தில் மிகச் சரியாகவே தனது உரையை முடித்துக் கொண்டார்.

''விஞ்ஞான விடயங்களுக்கு வரைவிலக்கணம் சொல்வது போல், 'கவிதை என்றால் என்ன?' என்று வரைவிலக்கணம் சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல முடியாமலிருப்பதே கவிதையின் சிறப்புமாகும்.

'அழகு' என்ற சொல்லுக்கு உங்களால் வரைவிலக்கணம் கூற முடியுமா?

சோதிடச் செய்யுங்கள் அம்பகுபாவனை.

'வாரார் என அடைந்தும் வருவார் எனத் திறந்தும்

காராணி தேய்ந்த கதவு'

என்று சொல்லும்போது, இரவு முழுவதும் விழித்திருந்து அடிக்கடி எழுந்து வெளியே வந்து, கண்களில் நீர் நிறைய முகம் அழுது வீங்கியிருக்க... கதவைத் திறந்து பார்க்கிற ஒரு பெண் மனப்பதிவாகிறாள்.

''இவ்வளவிற் சொல்லுங்கொல்

இவ்வளவிற் காணுங்கொல்

இவ்வளவிற் காதல், இயம்பும் சொல்— என்ற கவிதை நளனுடையது anxiety யை அற்புதமாய்ப் படம் பிடித்துவிடுகிறது.

படத்தை எந்தக் கோணத்தில் இருந்து பிடிக்கவேண்டும் என்பது படப்பிடிப்பாளனுக்கு மட்டுமல்ல நல்ல கவிஞனுக்கும் தெரியும்.

சிறந்த ஓவியன் ஒருவன் மூன்று கோடுகளுடன் நல்லதோர் ஓவியத்தின் முழுத்தோற்றத்தை எடுத்து விடுவான். நல்ல கவிஞனும் அப்படியே பாருங்கள்.

''கையிற்றனிச் சிலம்பும், ஆவி குடிபோன அவ்வுயிரும்—'' இரண்டு கோடுதான் கண்ணகியின் கோலம் மனதிற் பதிந்து விடுகிறது.

சிறந்த கவிஞர்கள் கற்றறிந்தார் மத்தியில் தான் உருவாகமுடியும் என்றில்லை.

'கலுங்கல் இடிக்க,
அக்கினி மூடிக்க,
பெருந்தெரு காத்துத்
தேடின காசமோனை... ...'

—04 ஆம் பக்கம் பார்க்க

★ 50 ஆயிரம் போத்தல் கள் விற்பனைக்குத் தயார்

# சங்கானை கள் அடைக்கும் தொழிற்சாலை

# மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன

சங்கானையில் உள்ள வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் போத்தலில கள் அடைக்கும் தொழிற்சாலையில் 50 ஆயிரம் போத்தல் கள் அடைக்கப்பட்டு விற்பனைக்கு தயாரான நிலையில் உள்ளது.

மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் கடந்த மாதம் இயங்காமல் இருந்து வந்த இத் தொழிற்சாலை தற்போது விறகைப் பயன்படுத்தி இயங்க வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத் தொழிற்சாலையில் தினசரி 1, 500 போத்தல் கள் விஞ்ஞான முறைப்படி போத்தலில் அடைக்கப்படுவதாகவும், போத்தல் மூடிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தொழிற்சாலை முகாமையாளர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும், தென்னிலங்கைக்கும் அதிகளவு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

இதற்கு அங்கு நல்ல மவுசு உள்ளதாகவும், தற்போதைய சூழ் நிலையில் வெளிமாவட்டங்களில் சந்தைப் படுத்துவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (13)

## ஒப்பந்த அடிப்படையில் பல்கலைக்கழக நியமனம்

யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள சில பதவி வெற்றிடங்கள் இம்மாத இறுதிக்குள் தற்காலிக நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

தொழில் நுட்ப வியலாளர், நூலக உதவியாளர், நூலகப் பராமரிப்பாளர், விடுதி மேற்பார்வையாளர், லிகிதர், புத்தகம் கட்டுநர் ஆகிய பதவிகள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

நேற்று முதற்கட்டமாக நால்வர் சுருக்கெழுத்து. தட்டெழுத்தாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன (74)

சங்கானை நகரில்

## பிரிவுபசார வைபவத்தில் அரச அதிபர்

## யாழ் மாவட்ட மக்களுக்காக தொடர்ந்தும் பணியாற்றுவேன்

யாழ் மாவட்ட மக்களுக்கு நான் ஆற்றும் சேவை இன்றுடன் முடியப்போவதில்லை. இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் துயரங்களை நான் அனுபவரீதியாக உணர்ந்தவன். கொழும்பு சென்றாலும் இம் மாவட்ட மக்களுக்கு என்னால் முடிந்த சேவையை தொடர்ந்து ஆற்றுவேன்

யாழ் செயலக அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் ஊழியர்களால் அளிக்கப்பட்ட பிரிவு உபசார வைபவத்தில் கலந்து கொண்ட அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் இவ்வாறு தெரிவித்தார்.

செயலக பொதுசன தொடர்புகள் அதிகாரி திரு எஸ். ஐ நித்தியராஜ தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் செயற்திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் பத்மநாதன் உரையாற்றுகையில் நிர்வாகத்துறையில் ஏற்பட்டுள்ள அனுபவ முதிர்ச்சியினாலேயே இம் மாவட்டத்தில் அவர் சிறப்பாகப் பணிபுரிய முடிந்தது என்று குறிப்பிட்டார்.

நெருக்கடியான கால கட்டங்களில் அரசாங்க அதிபர் இம் மாவட்ட மக்களுக்காக அடிக்கடி கொழும்பு சென்று உயர் அதிகாரிகளோடு பேச்சுக்கள் நடாத்தி பல அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றியது குறித்துப் பலரும் பாராட்டிப்பேசினர். (66

## புகையிலைச் செய்கை வடமராட்சியில் தீவிரம்

வடமராட்சிப் பகுதியில் புகையிலை அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இம்முறை புகையிலை பயிர்ச்செய்கை குறைவானதாக இருந்தபோதிலும் ஒரு (பச்சை) புகையிலைச் செடி 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரையில் விலை போகிறது.

இதேவேளையில் அண்மைக் காலத்தில் கணிசமான அளவு பதப்படுத்தப்பட்ட புகையிலை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

எரிபொருள், உரவகைகள் தட்டுப்பாடு கூலி உயர்வு ஆகியவற்றுக்கு மத்தியில் தற்போதைய (பச்சை புகையிலை விலை நிதானமானதெனக்கருதப்படுகிறது. (50)

## கலாசார மண்டபப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது

சங்கானை கலாசார மண்டபத்தை சுற்றியுள்ள பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் அப் பகுதியின் சுற்றாடல் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சங்கானை கலாசார மண்டபத்திலும் அதற்கு முன்பாகவுள்ள வளிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலக சுற்றாடலிலும் தங்கியிருக்கும் அகதிகள் முடும்பங்கள் மலசல கூடவசதிகளை சரிவரப் பேணாத காரணத்தினால் இந்த அவல நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் இதுபற்றி கவனித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பொது சுகாதாரம் பாதிக்கப்பட்டு தொற்று நோய்கள் பரவக் கூடும் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் இப்பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் பலருக்கு பீடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (13)

### மேலதிகமாக...

தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாலேயே இதன் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாகக் கூறப்படுகிறது

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே மேலதிகமாக 'லக்ஸ்பிறே' பக்கெட்டுக்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் ஏனைய பகுதிகளுக்கு இது இடைக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

### மன்னார்...

சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் ஜெனரல் கிதில் ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தி

### உலர் உணவு...

இனமும் அலைந்து திரிகின்றனர்.

நேற்று முன்தினம் சுவாமியார் வீதியில் உள்ள இராம சேவகர் அலுவலகத்தில் ...

### மானிப்பாய்...

ஒருவரின் 3 500 ரூபா பெறுமதியுடைய லுமாலா லேடிஸ் சைக்கிள் ஒன்றும் கல்லூரி சைக்கிள் தரிப்பிடத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்தும் இருட்டுப் போயுள்ளதாக

## எம். பி பதவியிலிருந்து நீக்கமுடியாது என மனு

முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட எம். பியான ஏ. எம் ஹிஸ்புல்லா தம்மை பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் கேட்டுள்ளதை ஆட்சேபித்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

1989 பெப்ரவரியில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனக்கு 15, 832 வாக்குகள் கிடைத்துமுதலாம் இடத்தில் வந்ததாகவும், முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராகவும் பிரதித் தலைவராகவும் தான் பணிபுரிந்ததாகவும் ஜனாப் ஹிஸ்புல்லா தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் யாப்பின்படி எம். பி. பதவி வெற்றிடம் ஏற்பட்டால் அல்லது ராஜினாமாச் செய்தால் மட்டுமே புதியவர் நியமிக்கப்படவேண்டும் எனவும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவர் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரது பதவிக்காலம் வரை பணிபுரியவேண்டும் எனவும் அம்மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார், இருகூட்டங்களுக்கு வராததால் தன்னை கட்சியில் இருந்து விலகியதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கடிதம் எழுதியுள்ளது தவறு எனவும் அவர் மனுவில் தெரிவித்தார்.

## தி. மு. கவுடன் திருநாவுக்கரசு தொகுதி உடன்பாடு?

செல்வி ஜெயலலிதாவின் அ.தி மு க அணியில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசின் மற்றுமோர் அ. தி. மு. க பிரிவு நேற்று மு கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

தி. மு. கவுடன் தொகுதி உடன் பாடு காணுவதில் இருதரப்பும் உடன் பாடு கண்டு வருவதாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

## கட்சிகளின் அனுமதியின்றி தேர்தல் கண்காணிப்புக் குழு

தேர்தல் கண்காணிப்புக் குழு ஒரு நாட்டுக்கு அழைக்கப்படும்போது அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் ஆலோசனை நடாத்தியிருக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் சார்க் கண்காணிப்புக்குழு அழைக்கப்பட்டது குறித்தே இவ்வாறு அறிக்கைவிடப்பட்டுள்ளது.

## இஸ்ரேலை வெளியேறுமாறு கேட்கிறது அமெரிக்கா

இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்து வெளியேறினால் மேற்காசியாவில் உண்மையான அமைதி ஏற்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் அவர் அளித்த பேட்டி ஒன்றில் மேற்குப்பிரதேசம், கோலான் வெளி, காசா பகுதி போன்ற ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியைவிட்டு இஸ்ரேலியப் படைகள் வெளியேற வேண்டும். இதுவே உண்மையான சமாதான நிலையை ஏற்படுத்தும் என்றார்.

## யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படும் நிதிபோதாது

யாழ் போதனா வைத்திய சாலையின் நடைமுறைச் செலவுக்கென இவ் வருடம் ஒதுக்கப்பட்ட தொகை போதியதாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலைக்கு தேவையான பல பொருள்கள் வெளியிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்டுவருகிறது.

இதனால் இந்த நிதியைக் கொண்டு நடைமுறைச் செலவை சமாளிக்க முடியாமல் உள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (74)

## முல்லையில் முத்திரைகள்

...சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் ஜெனரல் இதில் ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய ரணதுங்க, மட்டக்களப்பு தொப்பிகல பகுதி காட்டில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இராணுவத்திற்கு துணையாக விமானப்படையும் தாக்குதல் நடாத்துவதாகவும் இதில் 4படையினர் பலியாகினர் 14 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவித்தார்.

காரைநகர் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் புலிகளின் தாக்குதலால் காரைநகர் தளத்தின் கட்டிடங்கள் பல சேதமாகிவிட்டன என்றும் அங்கு தொடர்ந்து மோதல் நடக்கின்றது என்றும் சொன்னார்.

...நின்றும் அலைந்து திரிந்தனர்.

நேற்று முன்தினம் சுவாமியார் வீதியில் உள்ள இராம சேவகர் அலுவலகத்தில் மக்கள் நண்பகல் முதல் மாலை 5 மணிவரை காத்திருந்து ஏமாற்றத்துடன் சென்றதைக் காண முடிந்தது.

குடும்பவிவரம் தொடர்பான விண்ணப்பப்படிவங்களைத்தருபவர்களுக்கே உணவு அட்டை மீளாய்வு செய்யப்படும் எனவும் கிராம சேவகர் தெரிவிக்கிறார். ஆனால் இப்பகுதி மக்களில் சிலருக்கே இப்படிவங்கள் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அடுத்த கட்டங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்களை பெற முடியாது போகலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது (16)

...மதிப்புடைய ஹிமாலர் லேடிஸ் சைக்கிள் ஒன்றும் கல்லூரி சைக்கிள் தரிப்பிடத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்தும் திருட்டுப் போயுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது

சில தினங்களுக்கு முன்னரும் மாணவி ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது (13)

**மீன்பிடித்...**

படுத்துவது குறித்து ஆராய இவர் சமூகமளிக்காததால் இப் பணம் திரும்பிச் செல்லும் எனவும் தெரியவருகிறது.

இந்த அதிகாரியை எவராவது அழைத்துவந்து தம்முடன் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (33)

...தோன்றியுள்ளன.

வைத்தியசாலைக்கு தேவையான பல பொருள்கள் வெளியிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன.

போக்குவரத்து தடை பொருளாதாரத் தடை காரணமாக பொருள்களின் விலை வெளியில் பல மடங்கு அதிகரித்துள்ளது.

ஆனால் கொழும்பு விலைகளை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்பட்ட நிதியே வைத்தியசாலைக்கு

**காரைநகரில்...**

யினால் சுமார் 1300 குடும்பங்களுக்கு இலவச உலர்உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன. 13

**ஈழத்தமிழ்...**

ள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது இவர்கள் கட்சி ஆதரவு நடவடிக்கையிலோ அல்லது ஊர்வலங்களிலோ கலந்துகொள்வதைத் தடுத்திடுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

**கையொப்பமிட...**

நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் எனவும் இதற்கான ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிகிறது. (ப-10)

(74)

...னார்.

## முல்லையில் முத்திரைகள் தாராளமாகக் கிடைக்கும்

முல்லை மாவட்டத்திலுள்ள சகல தபாலகங்களிலும் போதியளவு சகல தரத்திலான முத்திரைகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன.

இந்த முத்திரைகளைப் பிற மாவட்டங்களிலிருந்தும் மக்கள் வந்து தங்கள் தேவைகளுக்குப் பெற்றுச் செல்வதைக் காண முடிகிறது.

முல்லை மாவட்டத் தபால் அத்தியட்சகர் சு. பரராசசிங்கம் அண்மையில் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்ததையடுத்து முத்திரைகள் கிடைத்துள்ளன (33)

## குடாநாட்டில் தட்டுப்பாடு அதிகரிப்பு வேலிமரங்களும் விறகாகின்றன

விறகுத் தட்டுப்பாடு பெருமளவில் நிலவி வரும் இவ்வேளையில் விறகுக்காக வேலி மரங்களும் வெட்டப்படுவது குடாநாட்டில் பெருகிவருகிறது.

சில மரத் தொழிற்சாலைகள் பருத்த வேலி மரங்களை விலைக்குப் பெற்று அவற்றைக் கொத்தி விற்று வருகிறார்கள்.

வாதநாராணி, புளி,பூவரசு முதலிய மரங்களே பெருமளவில் விறகுக்காக வெட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-2)

**இராணுவ...**

கொண்டது இந்த யுத்தத்தில் ஓர் திருப்பு முனையை ஏற்படுத்தலாம் எனத்தாம் எதிர்பார்ப்பதாகவும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

**கவிதைப் பட்டறை...**

இது அப்பக்காரக் கிழவி ஒருத்தி சொன்ன வசனம், எவ்வளவு அருமையான கவிதை என்று பாருங்கள்!

அவற்றை

பொட்டென்ன? பூவென்ன? காதுக்கை
பூவென்ன? மெட்டென்ன? மிதி என்ன?
பாரன் ஆனை!

இது சண்டை ஒன்றில் வெளிப்பட்ட சாதாரண வசனம். ஆகவே, கவிதை இலக்கு இயல்பாகவுந்தான் வருகிறது.

ஏழை என்ற சொல் இராமாயணத்தில் எத்தனையோ கருத்துக்களில் பயன்படுவதை அறிந்தவர் தான் அறிவர். சொல்லின் பொருள் சொல்லில் இருந்து விலகி அகராதிக் கருத்தில் இருந்து விலகி நிற்கப் பாவிப்பது கவிஞனின் திறமை.

இத்தகைய சிறப்புடைய கவிதையை எழுத, ஒரு 'மூட்டு' வரவேண்டும் அந்த மூட்டுத்தீர எழுத வேண்டும். யாருடைய மெட்டில் எழுதுவது என்று யோசிக்க வேண்டாம். உங்களுடைய மெட்டில் எழுதுங்கள்'' என்று கூறி முடித்தார் பண்டிதர்.

(தொடரும்)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தியங்காடு டச்சு வீதி லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 11-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.